தமிழகத்தில் 13 ஆண்டுகளுக்கு பிறகு

ஆட்டோ மீட்டர் கட்டணம் உயர்வு

முதல் 1.8 கி.மீக்கு ரூ.50; கூடுதலாக ஒவ்வொரு கி.மீக்கும் ரூ.25 கட்டணம்



சென்னை, அக்.29: தமிழகத்தில் ஆட்டோக்களுக்கான மீட்டர் கட்டணத்தை உயர்த்தி தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. இதன்படி, முதல் 1.8 கி.மீ. தூரத்துக்கு குறைந்தபட்ச கட்டணமாக ரூ.50 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேல் பயணம் செய்யும் ஒவ்வொரு கூடுதல் கிலோ மீட்டருக்கும் ரூ.25 கட்டணம் வசூலிக்கப்படும்.

தமிழகத்தில் ஆட்டோ மீட்டர் கட்டணம் கடந்த 2013ம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட நிலையில், சுமார் 13 ஆண்டுகளாக கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்று ஆட்டோ ஓட்டுநர்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர். இந்நிலையில், போக்குவரத்துத்துறை அமைச்சருடன் ஆட்டோ ஓட்டுநர் சங்க நிர்வாகிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். இதைத்தொடர்ந்து, தற்போது தமிழக அரசு புதிய கட்டண விவரங்களை அறிவித்து அரசாணை வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக தமிழக அரசின் உள்துறை முதன்மைச் செயலாளர் கார்த்திக் வெளியிட்டுள்ள அரசாணையில், கடந்த 2013ம் ஆண்டு ஆகஸ்ட் 25ம் தேதி மற்றும் 2014ம் ஆண்டு அக்டோபர் 16ம் தேதி வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், சென்னையிலும் தமிழகத்தின் பிற பகுதிகளிலும் இயக்கப்படும் ஆட்டோக்களுக்கு புதிய கட்டண விகிதங்களை நிர்ணயிக்க மாநில போக்குவரத்து ஆணையர் மற்றும் சம்பந்தப்பட்ட மண்டல போக்குவரத்து ஆணையர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

சாதாரண சாலைகளில் இயக்கப்படும் ஆட்டோக்களுக்கு முதல் 1.8 கி.மீ. தூரத்துக்கு ரூ.50 கட்டணம் வசூலிக்கப்படும். அதற்கு மேல் ஒவ்வொரு கி.மீக்கும் ரூ.25 செலுத்த வேண்டும். மலைப்பாதைகளில் இயக்கப்படும் ஆட்டோக்களுக்கு குறைந்தபட்சக் கட்டணம் ரூ.60 ஆகவும், கூடுதலாக ஒவ்வொரு கி.மீக்கும் ரூ.30 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இரவு 10 மணி முதல் அதிகாலை 5 மணி வரை பயணம் செய்வோரிடம் வழக்கமான கட்டணத்தின் ஒன்றரை மடங்கு வசூலிக்கப்படும். ஆட்டோக்கள் காத்திருக்கும் நேரத்துக்கு ஒரு நிமிடத்துக்கு ரூ.1 கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆட்டோ உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் 6 மாதங்களுக்குள் புதிய கட்டணத்துக்கு ஏற்ப மீட்டரை மறுசீரமைக்க வேண்டும். அதுவரை போக்குவரத்துத் துறை இணையதளத்தில் உள்ள புதிய கட்டண அட்டையைப் பதிவிறக்கம் செய்து, பொதுமக்களின் பார்வைக்காக ஆட்டோவில் வைத்திருக்க வேண்டும் என போக்குவரத்துத் துறை உத்தரவிட்டுள்ளது.

இடிந்து விழும் நிலையில் நடைமேம்பாலம்



▶ சென்னை கொருக்குப்பேட்டை ரயில் நிலையத்தில் உள்ள நடைமேம்பாலம் முற்றிலும் சிதிலமடைந்து, இடிந்து விழும் நிலையில் உள்ளதால், பயணிகள் பீதியுடன் வந்து செல்கின்றனர்.

தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் விவகாரம்

ஜாமீன் கோரி அன்பில் மகேஷ் மனு

சிறப்பு நீதிமன்றத்தில் இன்று விசாரணை

சென்னை, அக். 29: முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியை 5 நாள்கள் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி கோரி மத்திய குற்றப்பிரிவு போலீஸார் சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர்.

அந்த மனுவில், தலைமறைவாக உள்ள முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முத்துகுமார் உடனான தொடர்புகள், யார் யாரிடம் எவ்வளவு பணம் பெறப்பட்டுள்ளது என்பது உள்ளிட்ட விசாரணை நடத்த வேண்டியிருப்பதால் 5 நாள் காவலில் வைத்து விசாரிக்க அனுமதிக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஜாமீன் கோரி தாக்கல் செய்துள்ள மனு, நீதிபதி எல்.எஸ்.சத்தியமூர்த்தி முன்பு இன்று விசாரணைக்கு வரவுள்ள நிலையில், காவலில் எடுத்து விசாரிக்கக் கோரிய மனு குறித்து காவல்துறை தரப்பில் முறையிடப்படும் என்று கூறப்படுகிறது.

தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை...

முதல் பக்க தொடர்ச்சி

தகவல் தொழில்நுட்பத் தொகுதிகள், இணையவழி தளங்கள், வெளிநாட்டுப் பயண அனுமதிகள், கூட்ட நிகழ்ச்சி நிரல்கள், வாக்காளர் பட்டியல் தரவுகளின் மையப்படுத்தல், படிவம் 6 மாற்றங்கள், மேற்கு வங்க மேல்முறையீடுகள் உள்ளிட்டவை குறித்து ஆட்சேபனைகள் எழுந்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்ட விண்ணப்பத்துக்கு அளித்த பதிலில், தற்போது நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு வாக்காளரையும் ஒப்பிட்டுச் சரிபார்ப்பதற்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்படும் 2003ம் ஆண்டின் உத்தரவுகளையும் வழிகாட்டுதல்களையும் கூட தேர்தல் ஆணையத்தால் சமர்ப்பிக்க முடியவில்லை.

2026 ஜூலை மாதம் ECINET இணையதளத்தில் இடம்பெற்ற படிவம் 6ல் விண்ணப்பதாரர் அல்லது அவரது பெற்றோர், தாத்தா, பாட்டி ஆகியோரின் பெயர்கள் முந்தைய எஸ்ஐஆர் பட்டியலில் இருந்தனவா எனக் கேட்கும் நிபந்தனை சேர்க்கப்பட்டுள்ளது. இந்த மாற்றத்துக்கு 16-5-2026 அன்று டாக்டர் விவேக் ஜோஷி ஆட்சேபனை தெரிவித்ததாகவும், டாக்டர் சுக்பீர் சிங் சந்து அதனை ஏற்றுள்ளார். 5-10-2026 அன்று உச்சநீதிமன்றம் மாற்றப்பட்ட படிவம் 6க்கு ஒப்புதல் அளித்ததாகக் கருத முடியாது எனத் தெளிவுபடுத்தியது.

தேர்தல் ஆணையத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு தலைமை இயக்குநர் போன்ற ஓர் அதிகாரி, உதவி வாக்காளர் பதிவு அலுவலர் (AERO) அல்லது வாக்காளர் பதிவு அலுவலர் (ERO) ஒப்புதல் அளித்து வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்ட வாக்காளர்களின் பெயர்களை நீக்குவதற்கு அதிகாரம் பெற்றிருப்பது சட்டவிரோதமானது. இது 1950 மற்றும் 1951ம் ஆண்டுகளின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டங்களின் விதிகளுக்கு முரணானது.

இதனால்தான், சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியின்போது, திமுகவின் முகவர்கள் முனைப்புடன் உதவிய போதிலும், பல ஆண்டுகளாகத் தங்கள் தொகுதியில் வசித்து, முந்தைய பல தேர்தல்களில் வாக்களித்த உண்மையான வாக்காளர்கள் பலரின் பெயர்கள் இறுதி வாக்காளர் பட்டியலில் இடம்பெறவில்லை.

தற்போது பொதுவெளியில் வெளியாகியுள்ள ஆதாரங்களின் அடிப்படையில், அரசியலமைப்புச் சட்டத்தின் 324(5)வது பிரிவை, 124(4)வது பிரிவுடனும், 2023ம் ஆண்டுச் சட்டத்தின் 11வது பிரிவுடனும் இணைத்துப் படிப்பதன் அடிப்படையில், தலைமைத் தேர்தல் ஆணையருக்கு எதிராகத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்துப் பரிசீலிக்குமாறு நாடாளுமன்றத்தின் இரு அவைகளுக்கும் குடியரசுத் தலைவர் செய்தி அனுப்பலாம்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 324(2)வது பிரிவின்படி, தலைமைத் தேர்தல் ஆணையரை நியமிக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உள்ளதையும், அரசியலமைப்புச் சட்டத்தைக் காக்கும் கடமையை நிறைவேற்றுவதற்கு, தற்போதைய சூழலைவிட மிக அவசியமான ஒரு தருணம் வேறெதுவும் இருக்க முடியாது.

அரசியலமைப்பின் 86(2)வது உறுப்பின்படி நாடாளுமன்றத்தின் இரு அவைகளுக்கும் செய்தி அனுப்பி, தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எதிரான மனுவிலும் பொதுவெளியிலும் உள்ள குற்றச்சாட்டுகளைப் பரிசீலித்து, அரசியலமைப்பின் 324(5)வது உறுப்பு, 124(4)வது உறுப்பு மற்றும் 2023ம் ஆண்டு சட்டத்தின் 11வது பிரிவின்படி பதவிநீக்க நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்த வேண்டும்.

அரசியலமைப்பின் 78வது உறுப்பின்படி பிரதமரிடமிருந்து தகவல்களைப் பெற்று, இந்த நாடாளுமன்ற நடவடிக்கை முடிவடையும் வரை தலைமைத் தேர்தல் ஆணையர் தனிப்பட்ட முறையில் ஆணையத்தின் அதிகாரங்களைப் பயன்படுத்தாதிருப்பதையும், ஒவ்வொரு முடிவும் 2023ம் ஆண்டு சட்டத்தின் 18வது பிரிவின்படி கூட்டு முடிவாக எடுக்கப்பட்டு அதன் கூட்டக் குறிப்புகள் பதிவு செய்யப்படுவதையும் உறுதிசெய்ய வேண்டும்.

2025 எஸ்ஐஆர் நடவடிக்கையின்போது தமிழ்நாட்டின் வரைவுப் பட்டியலில் இடம்பெறாமல் போன 97,37,832 வாக்காளர்களின் பெயர் நீக்கங்களின் சட்டப்பூர்வத்தன்மை, 23-2-2026 இறுதிப் பட்டியல் மற்றும் 2026 சட்டமன்றத் தேர்தல் முடிவுகளின் மீதான தாக்கம் ஆகியவை குறித்து அரசியலமைப்பின் 143வது உறுப்பின்படி உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனைக் கருத்தைப் பெற வேண்டும்.

தமிழ்நாட்டில் 2026 சட்டமன்றத் தேர்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட எஸ்ஐஆர் அடிப்படையிலான வாக்காளர் பட்டியலை எதிர்காலத் தேர்தல்கள் மற்றும் இடைத் தேர்தல்களில் பயன்படுத்த வேண்டாம் என்று தேர்தல் ஆணையத்திற்கு அறிவுறுத்தி, எஸ்ஐஆர்-க்கு முந்தைய பட்டியலை மீண்டும் அடிப்படையாகக் கொண்டு சட்டப்படி திருத்தம் மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து மாநிலங்களிலும் எஸ்ஐஆர் நடவடிக்கையை முழுமையாக ரத்து செய்து, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1950 மற்றும் வாக்காளர் பதிவு விதிகள், 1960 ஆகியவற்றின்படி உரிய கால அவகாசம், தனிப்பட்ட அறிவிப்பு, விசாரணை வாய்ப்பு வழங்கி வாக்காளர் பட்டியல் திருத்தம் மேற்கொள்ள வேண்டும்.

ECINET, ERONET தொழில்நுட்பக் கட்டமைப்புகள் மற்றும் வாக்காளர் பட்டியல் மாற்றங்கள் குறித்து தேர்தல் ஆணையத்திற்கு வெளியிலுள்ள நிபுணர்களால் தடயவியல் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களில் மென்பொருள் கட்டுப்பாடுகள், பெயர்களை மீண்டும் சேர்ப்பதற்கான நடைமுறைகள் ஆகியவற்றை ஆய்வு செய்வதுடன், 24-6-2025 உத்தரவு தொடர்பான கோப்புகள், நிகழ்ச்சி நிரல்கள், கூட்டக் குறிப்புகள், ஆணையர்களின் ஆட்சேபனைகள் உள்ளிட்ட ஆவணங்களைப் பாதுகாக்க வேண்டும்.

தேர்தல் ஆணையத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஒப்புதலின்றி அதன் பெயரில் எடுக்கப்பட்ட முடிவுகள் 2023ம் ஆண்டு சட்டத்தின் 18வது பிரிவின்படி செல்லத்தக்கவையா என்பது குறித்து அரசியலமைப்பின் 143வது உறுப்பின்படி உச்சநீதிமன்றத்தின் ஆலோசனைக் கருத்தைப் பெற வேண்டும்.

தேர்தல் நடைமுறையின் மீதான மக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்க, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்குப் பதிலாக வாக்குச்சீட்டு முறையை மீண்டும் கொண்டுவர வேண்டும்; அதுவரை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படும் தேர்தல்களில் VVPAT ஒப்புகைச் சீட்டுகளை 100 விழுக்காடு எண்ணி ஒப்பிட்டுச் சரிபார்க்க வேண்டும்.

இந்தியக் குடிமக்கள் ஒவ்வொருவரின் வாக்குரிமையை பாதுகாக்க குடியரசு தலைவர் தமது அரசியலமைப்பு அதிகாரங்களுக்குட்பட்டு தேவையான பிற நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

இந்தியத் தேர்தல் ஆணையம் 70 ஆண்டுகளுக்கும் மேலாகப் பெற்றுள்ள நற்பெயர் எந்தவொரு தனி நபருக்கும் அல்ல; இந்திய மக்களுக்கே சொந்தமானது என்பதை மனு வலியுறுத்துகிறது. ஆணையத்தின் முடிவுகள் தங்களுக்குத் தெரியாமல் எடுக்கப்பட்டதாக அதன் உறுப்பினர்களே பதிவு செய்திருக்கும் ஆட்சேபனைகளைச் சுட்டிக்காட்டி, தேர்தல் நிர்வாகம் ஆட்சியிலிருக்கும் அரசின் கட்டுப்பாட்டுக்கு வெளியே இருக்க வேண்டும் என்ற டாக்டர் அம்பேத்கரின் அரசியலமைப்புக் கொள்கையைப் பாதுகாக்க, தலைமை தேர்தல் ஆணையரை பதவி நீக்கம் செய்ய குடியரசு தலைவர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கிய விவகாரம்

சென்னையில் பெண் தொழிலதிபருக்கு சொந்தமான வீட்டில் சோதனை

வழக்கு தொடர்பான ஆவணங்கள் சிக்கியதாக தகவல்

சென்னை, அக்.29: தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கிய விவகாரம் தொடர்பாக சென்னையில் பெண் தொழிலதிபர் சண்முகபிரியாவுக்கு சொந்தமான வீட்டில் மத்திய குற்றப்பிரிவு போலீசார் சோதனை நடத்தினர்.

தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கிய விவகாரம் தொடர்பாக அளிக்கப்பட்ட புகாரின் படி சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்து, தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சங்கம் நடத்தி வரும் பி.டி.அரசகுமார் உட்பட 3 பேரை மத்திய குற்றப்பிரிவு போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில் ரூ.100 கோடி வரை மோசடி நடந்து இருப்பது தெரியவந்தது. இந்த வழக்கில் தலைமறைவாக உள்ள முக்கிய குற்றவாளி என்று கூறப்படும் முத்துகுமார் என்பவரை தொர்டர்ந்து தேடி வருகின்றனர். அதே நேரம், இந்த மோசடி வழக்கில் முன்னாள் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் மற்றும் அவரது உதவியாளர்கள் வீடுகளில் சோதனை நடத்தப்பட்டு சில ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

அதைதொடர்ந்து முத்துகுமாரின் கார் டிரைவர் வெளியிட்ட வீடியோ ஆதாரங்களின் படி கடந்த 26ம் தேதி முன்னாள் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷை மத்திய குற்றப்பிரிவு போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில் இந்த வழக்கில் அதிகளவில் பணப்பரிமாற்றம் நடந்து இருப்பதாக கூறப்படுகிறது.

இதனால் சென்னையில் துணிக்கடை நடத்தி வரும் பெண் தொழிலதிபர் சண்முகபிரியா என்பவருக்கு சொந்தமான பெருங்குடி ராம்ஸ் ராக்ஸ்ரீ வில்லாஸ் அடுக்குமாடியில் குடியிருப்பில் உள்ள வீட்டில் 10 பேர் கொண்ட மத்திய குற்றப்பிரிவு போலீசார் நேற்று சோதனை நடத்தினர். இந்த சோதனையில் வழக்கு தொடர்பான சில ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படுகிறது.

தொழிலதிபர் சண்முகபிரியா இந்த வீட்டை சண்முகப்பிரியா ஆசிரியர் ஒருவருக்கு வாடகைக்கு விட்டுள்ளதாக கூறப்படுகிறது. இருந்தாலும் ஆவணங்கள் இங்கு இருக்கலாம் என்ற கோணத்தில் சோதனை நடத்தியதாக மத்திய குற்றப்பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

2026-27ம் நிதியாண்டின் இரண்டாம் காலாண்டில்

சிட்டி யூனியன் வங்கி மொத்த வர்த்தகம் ரூ.1,56,335 கோடியாக அதிகரிப்பு

முதன்மை செயல் அதிகாரி விஜய் ஆனந்த் தகவல்



சென்னை, அக்.29: சிட்டி யூனியன் வங்கி கும்பகோணம் மொத்த வர்த்தகம் ரூ.1,56,335 கோடியாக அதிகரித்துள்ளது, என வங்கியின் முதன்மை செயல் அதிகாரி விஜய் ஆனந்த் தெரிவித்துள்ளார்.

கும்பகோணத்தை தலைமை அலுவலகத்தை கொண்டு சென்னையில் செயல்படும் சிட்டி யூனியன் வங்கியின் 2026-27ம் நிதியாண்டின் இரண்டாம் காலாண்டு கணக்கு மற்றும் முதல் அரையாண்டிற்கான முடிவுகளை வங்கியின் நிர்வாக இயக்குனர், முதன்மை செயல் அதிகாரி விஜய் ஆனந்த் நேற்று வெளியிட்டார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில், 'வங்கியின் மொத்த வியாபாரம் நடப்பு நிதியாண்டின் இரண்டாம் காலாண்டில் வங்கியின் மொத்த வருமானம் 23% உயர்ந்து ரூ.1,56,335 கோடியாக அதிகரித்துள்ளது. வங்கியின் வைப்பு தொகை 21% உயர்ந்து ரூ.83,893 கோடியாகவும். கடன்கள் கடந்த ஆண்டைவிட 26% உயர்ந்து ரூ.72,442 கோடியாகவும் அதிகரித்துள்ளது.

நடப்பு நிதியாண்டின் இரண்டாம் காலாண்டில் வங்கியின் மொத்த வருமானம் ரூ.2442 கோடியாகவும், அதில் இதர வருமானம் ரூ.350 கோடியாகவும் உயர்ந்துள்ளது. நடப்பு நிதியாண்டின் இரண்டாம் காலாண்டில் வங்கியின் மொத்த லாபம் நடப்பு நிதியாண்டின் இரண்டாம் காலாண்டில் 40% அதிகரித்து ரூ.661 கோடியாக உயர்ந்துள்ளது. அதே சமயம் வங்கியின் நிகர லாபம் 27% அதிகரித்து ரூ.416 கோடியாக உயர்ந்துள்ளது.

மேலும் வங்கியின் நிகர வட்டி வருமானம் 31% அதிகரித்து ரூ.873 கோடியாக உள்ளது. வங்கியின் நிகர வராக்கடன் 0.48% ஆகவும், வங்கியின் சொத்து மீதான வருவாய் 1.62% ஆகவும் உள்ளது. வங்கியின் நிகர மதிப்பு கடந்த அரையாண்டில் இருந்த மதிப்பான ரூ.9,838 கோடியில் இருந்து ரூ.11088 கோடியாக உயர்ந்துள்ளது. வங்கி இன்று வரை 1,002 கிளைகள் மற்றும் 1,790 தானியங்கி பட்டுவாடா இயந்திரங்களையும் கொண்டு செயல்பட்டுவருகிறது,' என்றார்.

வடக்கு மத்திய இரயில்வே

மின்-கொள்முதல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: JHS/DYCMM/2026/24, தேதி: 26.10.2026

மின்-கொள்முதல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

இந்தியக் குடியரசுத் தலைவர் சார்பாக, வடக்கு மத்திய ரயில்வே ஜான்சி, ஜெனரல் ஸ்டோர் டெப்போவின் துணைத் தலைமைப் பொருட்கள் மேலாளர், பின்வரும் மின்-கொள்முதல் ஒப்பந்தப்புள்ளிகளை அழைக்கிறார்.

டெண்டர் எண்.: 51266243	டெண்டர் திறக்கும் தேதி: 16.11.2026

விளக்கம்: பொருள் ZS கப்ளிங் 500A, 750V, 3- ஃபேஸ் 50 HZ. RDSO விவரக்குறிப்பு எண். RDSO/PE/SPEC/AC/0177 REV. 1-2013 இன் பிரிவு 1.2 (A)- இன்படி, LHB ரயில் பெட்டிகளில் பயன்படுத்துவதற்காக பெட்டிகள் மற்றும் பவர் கார்களுக்கு உரியது. விவரக்குறிப்பின் பிரிவு எண். 4.2, 4.20 & 14.0-இல் உள்ள வரைபட எண். LW71304, Alt-c என்பதை LW71304, Alt-d எனப் படிக்கலாம். விநியோகத்தின் வரம்பு, கேபிள் மற்றும் கண்ட்யூட் நீளம் ஆகியவை வரைபட எண் ICF/SK3-7-1-101 ALT-b- இன்படி இருக்க வேண்டும். குறிப்பு: பேக்கிங் வழிமுறை: PI091 VER 1 .0 [உத்தரவாதக் காலம்: விநியோகத் தேதியிலிருந்து 30 மாதங்கள்] [ஆய்வு முகமை: TPI, ஒவ்வொரு கட்ட வாரியான ஆய்வு: இல்லை, கட்டங்கள்: 0]

அளவு: 10 செட்	முன்பண வைப்புத் தொகை: ரூ.102190/-

குறிப்பு: (1) மேற்கூறிய ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழுமையான விவரங்களை IREPS இணையதளத்தில் அதாவது, http://www.ireps.gov.in-இல் காணலாம். (2) மின்-ஏலங்களின் வடிவத்தில் இல்லாத ஏலங்கள் மேற்கண்ட டெண்டர்களுக்கு ஏற்றுக்கொள்ளப்படாது. இந்த நோக்கத்திற்காக, விற்பனையாளர்கள் தங்களை IREPS வலைத்தளத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும், மேலும் IT சட்டம்-2000 இன் கீழ் CCA ஆல் வழங்கப்பட்ட டிஜிட்டல் கையொப்ப சான்றிதழுடன் பதிவு செய்ய வேண்டும்.
(3) நிதி விகிதப் பக்கத்தில் உள்ளிடப்பட்ட மற்றும் முறையாக டிஜிட்டல் முறையில் கையொப்பமிடப்பட்ட விகிதங்கள் பரிசீலிக்கப்படும். விகிதங்கள் மற்றும் வேறு எந்த படிவத்திலும் / லெட்டர் ஹெட்டிலும் விற்பனையாளர்களால் இணைக்கப்பட்டிருந்தால், அவை உடனடியாக புறக்கணிக்கப்படும் மற்றும் பரிசீலிக்கப்படாது. 2438/26 (A)

North central railways | @CPRONCR | www.ncr.indianrailways.gov.in

குரூப்-4 வனத்துறை பணிகளுக்கான

2ம் கட்ட சான்றிதழ் சரிபார்ப்புக்கு தேர்வர்களின் பட்டியல் வெளியீடு

சென்னை, அக்.29: குரூப் 4 வனத்துறை பணிகளுக்கான இரண்டாம் கட்ட சான்றிதழ் சரிபார்ப்புக்கு தேர்வர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

சான்றிதழ்களை 30ம் தேதி முதல் நவம்பர் 11ம் தேதி வரை தேர்வாணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும் என தேர்வாணையம் தெரிவித்துள்ளது.

ஜெம் வீரமணி வழக்கு

ஜான் பாண்டியனிடம் எஸ்ஐடி குழுவினர் தீவிர விசாரணை



சென்னை, அக்.29: ஜெம் வீரமணி வழக்கில், டிஜிபி மகேஷ்குமார் அகர்வால் உத்தரவுப்படி ஐஜி தேன்மொழி தலைமையில் 4 பெண் அதிகாரிகள் கொண்ட சிறப்பு புலனாய்வு குழு (எஸ்ஐடி) அமைக்கப்பட்டது. இந்த குழு ஜெம் வீரமணியால் பாதிக்கப்பட்ட சிறுமிகள் குறித்து புகார் அளிக்கலாம் என்று சிறப்பு வாட்ஸ்அப் எண் ஒன்றை வெளியிட்டது.

அதன்படி இதுவரை ஜெம் வீரமணி மீது 12க்கும் மேற்பட்ட புகார்கள் வந்துள்ளது. ஜெம் வீரமணி மீது இது வரை 8 போக்சோ வழக்குகள் மற்றும் சிறுமி ஒருவரை தற்கொலைக்கு தூண்டியது என மொத்தம் 9 வழக்குகள் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஜெம் வீரமணியின் பாலியல் சீண்டலுக்கு உதவியதாக அவரிடம் கார் டிரைவராக பணியாற்றிய பாபு, பார்த்திபன், லாசர் ஆகியோரை கடந்த அக்டோபர் முதல் வாரத்தில் எஸ்ஐடி குழுவினர் கைது செய்தனர். பின்னர் அவர்களின் வீடுகளில் நடத்திய சோதனையில், வழக்கு தொடர்பாக 8 செல்போன்கள், 55 ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டது. சோதனையில் கிடைத்த ஆவணங்கள் மற்றும் டிரைவர்கள் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில், சிறப்பு புலனாய்வு குழு அதிகாரிகள் கடந்த அக்டோபர் காங்கிரஸ் காங்கிரஸ் கட்சியின் மாநில எஸ்சி, எஸ்டி பிரிவு தலைவர் எம்.பி.ரஞ்சன் குமாரிடம் 2 முறை விசாரணை நடத்தப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் ஜெம் வீரமணி வழக்கில் எம்.பி.ரஞ்சன் குமார் அளித்த வாக்குமூலத்தில், தமிழக மக்கள் முன்னேற்ற கழக தலைவர் ஜான் பாண்டியனை சென்னையில் உள்ள நட்சத்திர ஓட்டல் ஒன்றில் சாந்தியை சந்திக்க ஏற்பாடு செய்ததாகவும், அப்போது ஜெம் வீரமணிக்கு ஆதரவாக ஜான் பாண்டியன் பேசியதாக தெரிவித்திருந்தார்.

இதனால் எஸ்ஐடி குழு காங்கிரஸ் நிர்வாகி எம்.பி.ரஞ்சன் குமார் அளித்த தகவலின் அடிப்படையில் தமிழக மக்கள் முன்னேற்ற கழக தலைவர் ஜான் பாண்டியனுக்கு நேற்று நேரில் ஆஜராக சம்மன் அனுப்பட்டது. அதன்படி ஜான் பாண்டியன் நேற்று எஸ்ஐ குழு தலைவர் ஐஜி தேன்மொழி முன்பு ஆஜராகி விளக்கம் அளித்தார்.

அப்போது, ஜெம் வீரமணிக்கும் உங்களுக்கு என்ன தொடர்பு?, யார் உதவியுடன் சாந்தியை நட்சத்திர ஓட்டலில் சந்தித்தீர்கள், ஜெம் வீரமணியிடம் ரூ.20 கோடி பெற்று தருமாறு சாந்தி கூறியதாக சமூக ஊடகங்களில் தெரிவித்துள்ளீர்கள் அது உண்மையா?, ஒரு அரசியல் கட்சி தலைவர் கூறியதால் தான் ரஞ்சன்குமார் தன்னை சந்தித்ததாக செய்தி ஊடகங்களில் கூறியுள்ளீர்கள், அந்த கட்சி தலைவர் யார்?, இந்த வழக்கில் நீங்கள் ஜெம் வீரமணிக்கும், சாந்திக்கும் இடையே பிரச்னையை தீர்க்க கட்டப்பஞ்சாயத்து செய்தது உண்மையா?, காங்கிரஸ் நிர்வாகி எம்.பி.ரஞ்சன் குமார் உங்களை சந்தித்தது பேசியது என்ன என்பது உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட கேள்விகள் கேட்டதாகவும், அதற்கு சில கேள்விகளுக்கு மட்டும் ஜான் பாண்டியன் பதில் அளித்ததாகவும், மற்ற கேள்விகளுக்கு அவர் மவுனம் காத்ததாகவும் கூறப்படுகிறது. இருந்தாலும் ஜான் பாண்டியனிடம் நடத்திய விசாரணையின் போது அவர் அளித்த பதிலை எஸ்ஐடி குழுவினர் வாக்கு மூலமாக வீடியோ பதிவுகள் செய்து கொண்டனர்.

ஜெம் வீரமணி வழக்கில் அரசியல் கட்சி தலைவர் ஒருவரிடம் எஸ்ஐடி குழுவினர் விசாரணை நடத்திய சம்பவம் தமிழக அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

காணவில்லை



ரெஜி P.V.	சூசன் ரெஜி	ஜோமெட் ரெஜி
வயது: 62 உயரம்: சுமார் 5' 5" உடலைப்பு: நடுத்தர உடலமைப்பு சிறப்பம்சங்கள்: தாடி இல்லை, மீசை உண்டு, நரைத்த முடி, வழுக்கை, எப்போதும் கண்ணாடி அணிந்திருப்பார் மற்றவை: நடப்பதில் சிரமம்	வயது: 58 உயரம்: சுமார் 5 அடி உடலமைப்பு: நடுத்தர உடலமைப்பு சிறப்பம்சங்கள்: போதுமான அளவு முடி உடை: வழக்கமாக புடவைகள் மற்றும் சுடிதார்கள் அணிவார்.	வயது: 35 உயரம்: சுமார் 5'5" உடலைப்பு: நடுத்தர உடலமைப்பு சிறப்பம்சங்கள்: தாடி உண்டு, நீண்ட முடி வைத்திருப்பார். உடை: பொதுவாக பேண்ட்கள் மற்றும் சட்டைகள் அணிவார்.

மேலே உள்ள புகைப்படத்தில் காட்டப்பட்டுள்ள நபர்களான (1) ரெஜி P.V (வயது 62), (2) சூசன் ரெஜி (வயது 58), (3) ஜோமெட் ரெஜி (வயது 35) ஆகியோர், கோட்டயம் மாவட்டம், பனச்சிக்காடு கிராமம், பூவந்துருத் அஞ்சல் நிலையம், கிழக்கேமூலா, பாலமட்டத்தில் இல்லத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள், கோட்டயம், கேரளா, இந்தியா, கோட்டயம் கிழக்கு காவல் நிலையத்தில் கே.பி. சட்டத்தின் பிரிவு 57-இன் கீழ் பதிவு செய்யப்பட்ட குற்ற எண். 1352/2026-இன் படி, 26/09/2026 அன்று காணாமல் போயுள்ளனர். அவர்கள் இருக்கும் இடம் குறித்து யாருக்கேனும் தகவல் தெரிந்தால், தயவுசெய்து பின்வரும் தொடர்பு எண்களுக்கு உடனடியாகத் தெரிவிக்கவும்.

கோட்டயம் கிழக்கு காவல் நிலையம் (கேரளம்) - 0481 256 0333
SHO, கோட்டயம் கிழக்கு P.S (கேரளம்) - 9497987071
SI, கோட்டயம் கிழக்கு P.S (கேரளம்) - 9497980326

RO.NO:389/F2/2026/I&PRD

pnb Housing Finance Limited Ghar Ki Baat

பிற்சேர்க்கை-IV-A அசையாச்சொத்து(கள்)மின்-ஏலம்பொது விற்பனைஅறிவிப்பு கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம்-விற்பனை அறிவிப்பு பதிவு அலுவலகம்:- 9ஆவது தளம், அந்தரிக்ஷ் பவன், 22, கஸ்தூரிபா காந்தி மார்க், புதுடெல்லி-110 001, தொலைபேசிகள்: 011-23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com

கிளை முகவரி: எண். 16, முதல் தளம், முடிச்சூர் சாலை, மேற்கு தாம்பரம், சென்னை - 600045, தமிழ்நாடு.,

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் நிரல் எண்-A இல் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டுக் கடனீதோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ கடனீட்டுக் கடனீதோரின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஆக்கப்பூர்வ/கையக சுவாதீனம் (நிரல் எண்-C இல் விவரிக்கப்பட்டவாறு) செய்யப்பட்டிருக்கும் நிரல் எண்-D இல் குறிப்பிட்டுள்ள கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்து(கள்) ஆனது, கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில், உள்ளது உள்ளவாறு மேலும் உள்ளது எதுவோ அது அடிப்படையில்" விற்பனை செய்யப்படவுள்ளது.
கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள், 2002 இன் விதி 8(6) & 9 கீழ் நிரல் எண்-A இல் குறிப்பிட்டவாறு கடன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்)/ சம்பந்தப்பட்ட கடன்தாரர்/ அடமானதாரர்(கள்) (இறந்தது முதல்) அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள், சட்டப்பூர்வ பிரதிநிதி, (தெரிந்தது அல்லது தெரியாதது), நிறைவேற்றுநர்(கள்), நிர்வாகி(கள்), வாரிசு(கள்), உரிமையுற்றோர்(கள்) ஆகியோருக்கு இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின்/கடனீட்டுக் கடனீதோரின் இணையதளம் அதாவது www.pnbhousing.com இல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பினைப் படிக்கவும்.

கடன்எண்/கடன்தாரர்/ உப-கடன்தாரர்/ஜாமீன்தாரர்(கள்)/சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர்(A)	கோரப்பட்ட தொகை & நாள் (B)	சுவாதீன தன்மை (C)	அடமானச் சொத்துகள் விவரம் (D)	நிர்ணய விலை (RP)(E)	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையில் 10%) (F)	ஏலப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் (G)	ஏலம் உயர்த்தும் விகிதம் (H)	பார்வையிடும் நாள் & நேரம் (I)	ஏலம் நாள் & நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள்/நிலுவை வழக்கு ஏதேனும்இருப்பின் (K)
HOU/RTAMB/0424/1249208 கபிலன் சூரியகுமார்/ இந்திரகுமாரி முகுந்தன் கி அ :- மேற்கு தாம்பரம்	Rs. 2416481.82 & 14.05.25	நேரடி	S.No. 527/33, மனை எண். 40, பழைய எண். 82, புதிய எண். 24 சிவகாமி நகர், வரதராஜபுரம் ஸ்ரீபெரும்புதூர், தாலுகா காஞ்சிபுரம், வரதராஜபுரம், சென்னை, தமிழ்நாடு-600048	Rs. 1699000	Rs. 169900	12.11.26	Rs. 10000	05.11.26 11:00AM -5:00PM	13.11.26 2:00PM -3:00PM	எதுவுமில்லை/ அறியப்படாதது
HOU/RTAMB/0524/1261219 வெங்கடேஷ் V / யோகேஸ்வரி ஜானகிராமன் கி .அ.:- மேற்கு தாம்பரம்	Rs. 2250153.60 & 14.05.25	நேரடி	S.No..527 2பி, 33 பழைய பட்டா எண். 14126, S.No.. 527 33 B , நகர் பழைய எண். 82 புதிய எண். 34 வரதராஜபுரம் கிராமம் குன்றத்தூர் தாலுகா, காஞ்சிபுரம், பின் எண் 600048, இந்தியா	Rs. 1777000	Rs. 177700	12.11.26	Rs. 10000	05.11.26 11:00AM -5:00PM	13.11.26 2:00PM -3:00PM	எதுவுமில்லை/ அறியப்படாதது
HOU/RTAMB/0224/1217792 விக்னேஷ் R /திலகவதி R கி .அ:- ரோஷ்னி மேற்கு தாம்பரம்	Rs. 3245946.62 & 14.05.25	நேரடி	பிளாட் எண். F3, முதல் தளம், ராகவேந்திரா நகர் II, கூடுவாஞ்சேரி சார் பதிவு அலுவலகம் ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம்-603203, இந்தியா	Rs. 2270000	Rs. 227000	12.11.26	Rs. 10000	05.11.26 11:00AM -5:00PM	13.11.26 2:00PM -3:00PM	எதுவுமில்லை/ அறியப்படாதது
HOU/RTAMB/0424/1249220 ராம்குமார் B / பீமா யாமினி துர்கா கி .அ.:- ரோஷினி மேற்கு தாம்பரம்	Rs. 5068527.08 & 14.05.25	நேரடி	பிளாட் எண். F2, முதல் தளம், ராகவேந்திரா நகர் II, ஆதம்பாக்கம் கிராமம் கூடுவாஞ்சேரி, சார் பதிவு அலுவலகம் ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம், தமிழ்நாடு-603203	Rs. 3211000	Rs. 321100	12.11.26	Rs. 10000	05.11.26 11:00AM -5:00PM	13.11.26 2:00PM -3:00PM	எதுவுமில்லை/ அறியப்படாதது

*பொருந்துமாறு ஆண்டுக்கு 18% விகிதத்தில் மேற்கொண்டு வட்டி, அதற்கான பணப்பட்டுவாடா மற்றும்/அல்லது பணமாக்கும் தேதி வரை ஏற்பட்ட சாதாரண செலவினங்கள், செலவு கட்டணங்கள் ஏனையவற்றுடன் சேர்த்து. ** பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு நன்கு தெரிந்த மற்றும் அறிந்த வரையில், நிரல் எண்-K இல் அறிவிக்கப்பட்டது தவிர்த்து மேற்குறிப்பிட்ட அசையா/கடனீட்டுச் சொத்துகள் தொடர்பான பிற வில்லங்கங்கள்/ கோருரிமைகள் இல்லை. மேற்கொண்டு இவ்வித வில்லங்கங்கள் ஆனது வெற்றிபெறும் கொள்முதலாளர்/ஏலதாரர் மூலம் அவருடைய தாபயில் வழங்கப்பட/ செலுத்தப்பட வேண்டும். எதிர்நோக்கும் கொள்முதலாளர்(கள்)/ ஏலதாரர்கள் குறிப்பிட்டுள்ள வில்லங்கங்களின் உண்மைத்தன்மையை தனிப்பட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
1. நாளது தேதிப்படி, மேற்கூறிய அசையாச் சொத்துகள்/கடனீட்டுச் சொத்துகளை விற்பனை செய்தல், உரிமை மாற்றுதல் மேலும்/அல்லது விற்றுத் தீர்ப்பதற்கு பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ பின்னப்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியை தடுக்கும் நிரல் எண்- K இல் குறிப்பிடப்பட்ட ஆணை மேலும்/அல்லது நீதிமன்ற தடையுத்தரவு எதுவும் இல்லை.
2. எதிர்நோக்கும் கொள்முதலாளர்/ஏலதாரர் மற்றும் விருப்பமுள்ள நபர்கள் பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் வசமிருக்கும் அதற்கு தொடர்பான உரிமைப்பத்திரத்திரன் ஆவணப் பத்திரம் உட்பட ஆனால் வரம்புக்குட்படாது நிரல் எண்- K இல் தெரிவிக்கப்பட்ட செயல்பாட்டிலுள்ள வழக்குகள்/ வழங்கப்பட்ட ஆணைகள் ஏனையவை ஏதேனுமிருந்தால் அவற்றை தனிப்பட்டு ஆய்வு செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளி/ஏலப்புள்ளி விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கும் முன்பு அல்லது ஒப்பந்தப்புள்ளி(கள்) வழங்கும் முன்பு அனைத்து விதத்திலும் தாமாகவே திருப்தியுற வேண்டும். ஏலதாரர்(கள்) ஏலப்புள்ளிப் படிவத்துடன் இந்த ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் கையொப்பமிட வேண்டும்.
3. கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(3) இன்படி, ஏலதாரர்(கள்)/ கொள்முதலாளர் அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு மிகாமல் விற்பனை விலையின் 25% தொகையை, (முன்வைப்புத்தொகை ஏதேனும் செலுத்தப்பட்டிருந்தால் அவை உட்பட) செலுத்துவதற்கு சட்டப்பூர்வமாக கட்டுப்பட்டவர். கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(2) இன்படி கடனீட்டுக் கடனீதோர் மூலம் விற்பனை விலையின் 25% பெற்ற பிறகு மட்டும் ஏலதாரர்(கள்) பெயரில் விற்பனை உறுதிப்படுத்தப்படும். விற்பனை பரிசீலனைத் தொகையின் மீதி 75% ஆனது விற்பனை உறுதிக் கடிதம் ஒப்புகைத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினால், விற்பனை உறுதிப்படுத்தல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 15 நாட்கள் கட்டாயக் காலம் முடிவடைந்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி விற்பனைப் பரிசீலனைத் தொகையின் பகுதிப் பணத்தைப் பறிமுதல் செய்வார், மேலும் சொத்து/கடனீட்டுச் சொத்து சர்ஃபாசி சட்டத்தின் விதிகளின்படி மறுவிற்பனை செய்யப்படும்.
4. M/s. சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட், கார்ப்பரேட் அலுவலகம்: மனை எண் 68, 3ஆவது தளம், செக்டார் 44, குர்கான், ஹரியானா 122003, இணையதளம்-www.bankeauctions.com, மின்-ஏலம் மூலம் விற்பனை மேற்கொள்வதில் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு உதவும். சொத்து பார்வையிடுதல் அல்லது ஏலப்புள்ளி ஆவணங்கள் பெறுதல் தொடர்பான அனைத்து உதவிக்கு மேலும் ஏதேனும் பிற விசாரணைக்கு அல்லது பதிவுபெறுவதற்கு, நீங்கள் பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ நபரை ஸ்ரீசரண்/ஏங்கெல்ஸ்/ அருண்குமார் சண்முகசுந்தரம், செல்பேசி: 9738931789/ 934400787/ 9025468525, மின்னஞ்சல்: auction@pnbhousing.com அல்லது www.pnbhousing.com - ஐ காணவும்.

இடம்:- மேற்கு தாம்பரம், நாள்: 28.10.2026 ஒம்- அதிகாரப்பூர்வ அதிகாரி, பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்